PTF/01/Circular/01
2021.04.10

சுற்றறிக்கை இலக்கம்: PTF/03-2021

**சகல மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்**
**மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும்**

**<u>கொவிட் - 19 அனர்த்த நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.5000/- கொடுப்பனவொன்றைச் செலுத்துதல்</u>**

நாட்டில் நிலவிய மற்றும் நிலவுகின்ற கொவிட் அனர்த்த நிலைமை காரணமாகப் பாதிக்கப்பட்ட பின்வரும் குடும்பங்களுக்கு அவர்களுக்கு கிடைக்கும் மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக ஒரு தடவை மாத்திரம் ரூ.5000/- கொடுப்பனவொன்றைச் செலுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதன்போது இறுதியாக ரூ.5000/- கொடுப்பனவைச் செலுத்திய 10 குடும்பப் பிரிவுகளில் பின்வரும் 7 பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்கள் பயனாளிக் குடும்பங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

I. சமூர்த்தி பயனாளிக் குடும்பங்கள்
II. குறைந்த வருமானமுடையவர்கள் என இனங்காணப்பட்டுள்ள குடும்பங்கள்
III. முதியோர் கொடுப்பனவைப் பெறும் நபர்கள் உள்ள குடும்பங்கள்
IV. அங்கவீனர் கொடுப்பனவைப் பெறும் நபர்கள் உள்ள குடும்பங்கள்
V. சிறுநீரக நோய் நிலைமை காரணமாக கொடுப்பனவைப் பெறும் நபர்கள் உள்ள குடும்பங்கள்
VI. நூறு வருடப் பூர்த்திக்கான முதியோர் கொடுப்பனவைப் பெறும் நபர்கள் உள்ள குடும்பங்கள
VII. மேன்முறையீட்டினைச் சமர்ப்பித்து தகுதி பெற்ற குடும்பங்கள்
(மேற்குறிப்பிட்ட 6 குடும்பப் பிரிவுகளின் கீழ் மேன்முறையீட்டினைச் செய்து பயனைப் பெற்றுக்கொள்ள தகுதி பெற்ற குடும்பங்கள் மாத்திரம்)

02. இந்தக் கொடுப்பனவைச் செலுத்தும்போது மேற்குறிப்பிட்ட பயனாளிகள் உள்ள குடும்பமொன்றுக்கு ஒரு ரூ.5000/- மாத்திரம் கிடைக்கும் வகையில் செலுத்த வேண்டும். உதாரணமாக குடும்பமொன்று சமூர்த்தி உரிமையைப் பெற்றுக்கொள்ளுமாயின் மற்றும் முதியோர் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெறும் ஒருவர் அக்குடும்பத்தில் இருப்பின், இந்த சுற்றறிக்கையின் கீழ் அந்தக் குடும்பத்திற்கு ஒரு ரூ.5000/- கொடுப்பனவை மாத்திரமே செலுத்த வேண்டும்.

03. இந்தக் கொடுப்பனவைச் செலுத்தும்போது பயனாளிக் குடும்பங்களை இனங்காண்பதற்கு என்னால் வெளியிடப்பட்டுள்ள PTF/03-2020, PTF/03/2020(i), PTF/03/2020(ii), PTF/03/2020(iii), PTF/03/2020(iv) ஆம் இலக்க சுற்றறிக்கைகள் ஊடாக ஏலவே இனங்காணப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட 7 குடும்பப் பிரிவுகள் மாத்திரம் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெறுகின்றன. தேருநர் இடாப்பில் ஒரு பிரதான குடியிருப்பு இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பினும், அந்த பிரதான குடியிருப்பு அலகின் பிரதான

குடும்ப அலகிற்கு மேலதிகமாக ஒரு உப குடும்பமொன்று அல்லது அதற்கு அதிகமானவை இருப்பின் அவர்கள் PTF/03/2020 (iv) ஆம் இலக்க, 2020.04.20 ஆந் திகதிய சுற்றறிக்கைக்கு ஏற்ப இனங்காணப்பட்டுள்ளமையினால், அந்த உப குடும்பங்களுக்கும் ரூ.5000/- கொடுப்பனவு கிடைக்கும். அந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்பு உப குடும்பங்களாகப் பிரிந்திருப்பின் அது சம்பந்தமான இறுதி முடிவினைப் பிரதேச செயலாளர் மேற்கொள்ள முடியும்.

04. இந்தக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் போன்றே, பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏனைய பொருத்தமான உத்தியோகத்தர்களையும் பங்கேற்கச் செய்து ஏற்புடைய கொடுப்பனவை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி துரிதமாகப் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

05. PTF/03/2020 (ii) ஆம் இலக்க, 2020.04.15 ஆந் திகதிய சுற்றறிக்கையின் இணைப்பு - 01 இல் அலுவலக உபயோகத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ள படிவத்திற்கு ஏற்றவாறு பயனாளி ரூ.5000/- கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டார் என்பதற்கான அத்தாட்சிப்படுத்தலைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமானதாகும்.

சிங்கள, தமிழ் புத்தாண்டு காலப்பகுதியில் பொதுமக்கள் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களைத் தீர்த்து, அவர்களின் பொது வாழ்வினை இயல்பு நிலைக்கு மாற்றிக்கொள்ள இந்த சமூக நன்மை நிகழ்ச்சித்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை மிகவும் மதிக்கிறேன்.

**ஒப்பம்/ காமினீ எஸ். செனரத்**
பிரதம அமைச்சரின் செயலாளர்

**அன்டன் பெரேரா**
பிரதம அமைச்சரின் மேலதிக செயலாளர்
இணைச் செயலாளர், பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணி

பிரதிகள்:

01. ஜனாதிபதியின் செயலாளர்
02. அமைச்சரவையின் செயலாளர்
03. கணக்காய்வாளர் தலைமை அதிபதி
04. செயலாளர், நிதியமைச்சு

} தயவுடன் தகவலுக்காக

05. செயலாளர், சுகாதார அமைச்சு
06. செயலாளர், உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு
07. செயலாளர், சமூர்த்தி வதிவிடப் பொருளாதார, நுண்நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
08. செயலாளர், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோயியல் மற்றும் கோவிட் நோய்த் தடுப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு
09. பணிப்பாளர் நாயகம், சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

} தேவையான நடவடிக்கைகளுக்காக

10. பணிப்பாளர், தேசிய முதியோர் செயலகம்
11. பணிப்பாளர், வலது குறைந்தோருக்கான தேசிய பொதுச் செயலகம்

} தேவையான நடவடிக்கைகளுக்காக

- சுற்றறிக்கை தொடர்பாக மேலதிகத் தெளிவுகள் தேவைப்படின்;

கே பிரஸன்ன சந்தித் அவர்கள் - சிரேஷ்ட ஒருங்கிணைப்பாளர்,
பொருளாதாரப் புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான
ஜனாதிபதி செயலணி
077 3641563